௩௧. மணஞ்செய்தவருடமுதல் மனிகைதன்னல்
வருஞ்செல்வமிகவெனவும் வகுக்கலாகும்
மொன்னுமதில்முவ்வாண்டில் சிறக்கயில்ல
முயர்வாகச்செய்திடுவாள் முப்பான்ரெண்டில்
நண்ணுதந்தைபதம்புகுவா னறெண்டில்
நயக்கவ்வூர்தனில் வணிகனொருவனோடு
ஒண்ணிவொருசெங்குளத்தாய் வியாபாரத்தை
ஒததுசெய்வானவெகுநிதிய முடையோனவன். 462

௫௨. யெண்ணணைழாண்டிலிக்லம்வேறாயல்லோ
யிசைந்திடுவான்சவரிதுயிலிசையுங்கட்ட
உன்னயந்தயதின்மேலாய் தருமஞ்செய்வான்
உபகாரமெவர்களுக்குமுதவியுண்டு
நண்ணுவெகுகீர்த்திகருநமாயுள்மட்டும்
நயந்தமனையிரந்திடுவானன்பாநெட்டில்
ஒண்ணுசுணுமுடையனுமாய்வாழ்ந்துசஷ்டி
உயர்மூன்றுமாண்டிலிவநடைவான்வானே. 463

௫௫. இந்தநற்பலனையாங்க ளிசைந்தனனவக்கோளாலே
முந்தியகருமகாண்டம் முறைப்படிபவமொழிந்தால்
சுந்தரன்கனக்குச்சொன்ன சுகமெலாமனுபவிப்பான்
இந்திரனிறஞ்சுமாதே யெழில்சுதன்பலனிதாமே. 464

ஆகமொத்தம் 33-பதினொன்றாவதுஜாதகம்
முற்றிற்று.

லக்குன ரா-சுக் புதன்			சனி
சூரியன்	இராசிசக்கரம்		
செவ் சந்திரன்			குரு கேது

௧௨-வது மீனலக்குணம்.

௧. சந்திரனால்தனுவில் சார்ந்திடவீணைமைந்தன்
சுந்திரசிகியுமன்னன் சூழ்கன்னிசாடிவெய்யோன்
புந்தியஞ்சுங்கன்றுகு புகழ்மீனில்வந்துநிற்க
சுந்தரன்மீனமுற்றால் யிருநிலம்பிறந்தசெய்க்கே. 465

வேறு-விருத்தம்.

உ. வீதியதுசூரியவாஸ்தாகுமில்லம்
விளம்புகிறேம்தவவாசல்கடகநோக்கு
ஓனுவதில்லொருபாலில்கிரகமாகும்
முயர்மனைக்கிமுகடகத்திற்றீர்த்தமுண்டு
யாதியுரைகோயிலதின் மேற்கிலம்மா
யன்புடையாபாலன்முன்னம் ஜனனந்தன்னை
சோதிமதிமுத்தமுதே பெங்கண்மாதே.
சொல்லுகிறேமதின்விபரஞ் சுளுவாக்கேளே. 466

௩. அவனியிலேகாஞ்சிநகர்க் கருகுதென்பால்
ஆயர்குலத்துதித்துநிதி யனேகம்பெற்று
தவநிலையையுடையனுமாய் முருகன்பாதம்
தரிசித்துமுப்போதுந் தாளைப்போற்றி
நவநீதமெனவுருங்கோ யிருந்துநிற்க
நற்கெதியைபெறநண்ணி நயந்துகூறி
பவமதுவுஞ்சோருமற் பிறவிநீக்கி
பதமுறவேமனமுன்னே பரிந்தன்னாளில். 467

௪. எப்போதுமரிவசன மொழுவாற்கூறி
இசைசுரவிக்கம்பியமாய் பூமிமேலாய்
தப்பாதுநவநிதியும் பெருக்கப்பெற்று
தையலர்கள்பதிமூன்று தாரந்தொட்டு
மெய்ப்பாகவுலகவர்க்கு கீர்த்தியுண்டாய்
விளங்கியேபுதல்வருடன் வாழுநாளில்
ஒப்பரியயில்வேலைக் காரியீன்ற
ஒளிவதனமுகத்துடையாள் விதவைமாதே. 468

௫. இச்சைகொண்டுபோகித்து கருவுண்டாகி
யீன்றதனையவர்வதைக்க யற்றபாவம்
நிச்சியத்துவந்தவனை சூழ்ந்துகொண்டு
நீள்நரகம்புக்கிபபங்கு பலனுட்போக்கி
பச்சைமயிலுடையவனே யீன்றுய்க்கேளு
பங்கயவாசவனைபரை யோர்க்குசெய்து
உச்சரித்துவொருநூறு பேர்களுக்கும்
உறுதியாய்செய்யும்வகை யோதக்கேளே. 469

௬. இன்பமுடன்யிவர்களுக்கு வன்னமீந்தால்
இப்பிரவினீங்கிவிடும் யினிமேற்கேளு
அன்புடையபாலனிவன் பிரந்துசெல்வம்
அனுபவிக்கமந்தவகை அம்மாசொல்வோம்
பொன்பூமிநவநிதியும் முன்னாள்யோகம்
போனவனேயனுபவிக்க வந்தானென்னு
தென்புறவேயிவன்பலன்க ளறியநன்றாய்
தெரிவிப்பேன்சூக்ஷமதாய் தேவிகேளே. 470

௭. இவனுடல்மிருசிகப்பு வளர்த்தியுள்ளான்
இனத்துணைகள்கன்னியொன்று யிவனேற்முத்த
உவமையுளஅத்துவென்றே ஆண்பாலில்லை
வுருப்பதற்குபின்துணைகள் வொன்றுமில்லை
தவமுடையபதிற்கிவன்றன் யோகந்தன்னை
சாற்றுகிறோமெங்களுட தாயேகேளு
பவந்துடரப்பிரந்திந்த பாலனாலே
பாக்கியங்கள்வரும்வகையைப் பகர்வோமம்மா. 471

௮. தந்தைமனக்குறைதீர்க்க வந்தோனிந்த
சரக்கண்ணாற்கீர்த்திவரும் பெருமையுண்டாம்
தொந்தவினையொன்றுநறு அதுவேதன்ற
சொல்லுகிறோமிவன்தனக்கு ரெண்டாந்தந்தை
மிந்நகர்க்கடிசசேற கடிகைமூன்றில்
எழிலுடையவீதியது கிழக்குமேற்கில்
தந்தரணங்குழலுடையாள் தணித்தஜாதி
தையலருமழகுடையா மவளையுன்றை. 472

௯. துடந்தவளைபோகிக்க வேணும்போது
தோகைமிருகற்புடையா ளானதாலே
இடங்காடுகொதிகந்தி கோபங்கொண்டு
இடஞ்சல்வடகிடத்திடவு மனத்திலுண்ணு
குடமுலையானடக்குவொரு வான்சேயம்மா
குரித்தவனைவரவழைத்து கொடுமைகூறி
திடமுடனேதாய்மொழியை யுள்ளங்கொள்ள
தின்மையதாயம்மானைப் கூறுகின்றேன். 473

ம. ஆங்கதனைகற்புடையா ளறிந்துகொண்டு
ஆயாசமிகவுண்டாய் கற்பைநெத்து
தீங்குடையாள்தன்னாலே மதலைதன்னை
தீங்குரைத்துநம்முரைலய வகுப்பாய்நீயும்
யேங்கினியென்செய்வோ மென்றாள்மாது
இருந்திடுதாளிவன்றனையு மெதிரேகண்டு
பூங்கிளிபோல்வாய்திறந்து கரத்தைநீட்டி
புலம்பியவறுரைத்தவழி புகலக்கேளும். 474

கக. யெனமதலையென்வசன மிகக்ஷிசெய்ய
யிடஞ்சல்வந்துகுடும்பத்துக் செய்துமென்று
தன்வாக்காளவளிட்ட சாபத்தாலே
தான்வந்துகுடும்பத்தை சார்ந்துகொண்டு
பின்மூன்றும்சுதனுக்கு கலவாதென்று
பேசிறேமைதுவென்றி பிழைவேரில்லை
நன்மனத்தாய்பிடபமொன்று புதிதாய்செய்து
நரதருக்கேயுகந்தளித்தால் பவங்கள்தீரும். 475

கஉ பாழையொன்றுகற்பனது தெளிவிராது
பகையொன்றுண்டென்பதவு மனத்திற்கொள்ளான்
கூசலிட்டுவார்த்தைசொல்ல யுகந்ததோழன்
கோபிப்பன்பின்னதையுங் குணமாய்கொள்வான்
ஆசைகொள்ளவொருவனுக்கு யின்பங்கூரான்
அடுத்தவற்குவுபகார மனேகஞ்செய்வான்
பூசையொன்றுஞ்செய்திடவு மனஞ்செல்லாது
பூமிமிகயிவனாளில் பெருகும்பாரே. 476

கங. பார்தனக்குவொருவனென்பார் நல்லோர்பார்த்து
பக்ஷமதாய்ஆக்ஷியது மிகவேகூர்வார்
சீருடையயிவனாலே யீன்றதாதை
சிறப்பாகப்பிரபலமாய் சீருங்கொள்வான்
பேருடையயவன்தனக்கு விரோதியாவான்
பின்னவற்குயிடங்கொடுக்கான் பிசகொன்றில்லை
நீர்ரும்பூமியது சுகமாம்நாலில்
நிலையாகிபெருக் 'முண்டாய் நீங்கும்பாரே. 477

கச. வெகுசெனத்துக்குபகாரி சபைக்குதர்ம
வினைவழக்குமூனுடன் வழக்குசொல்லா

வெகுஞாதிகுரமுண்டு செழித்திரானே
பாரிவன்றன்செல்வத்திற் கேடொல்லாது
சொகுசுடையான்சயனமஞ்சை மெத்தையுண்டு
தொழும்புசெய்பவர்கள் வெகுபேருமுண்டு
தறுமனைக்குக்கணக்கறுண்டு காவலுண்டு
தாயேகேள்கனத்திறமும் தானேயுண்டு. 478

கரு. புத்திரனும்புத்திரியு மொவ்வொன்றுண்டு
புகழ்பெரியவாகனங்கள் புதிதாயுண்டு
சத்துருவைவெல்லுதற்கு சமத்துமுண்டு
தனையெதிர்பார்தங்களையு முந்துவான்பார்
எத்தவத்துமிவன்பெருமை சிலருஞ்சொல்வார்
எதிரிதனக்கவடறியா தின்பஞ்சொல்லான்
சத்திரங்கள்வுண்டுபண்ணு யிடுவானன்னம்
சூழ்வில்லாதீரனென்று யில்லங்கூரே. 479

கசு. நிதிபெருகும்பில்லாது சிலவேசெய்வான்
நீள்பூமிதனைத்திருந்த யீயுமாவான்
பதிமனையாள்தேசமிரான் காமயோகி
பரமாதர்கவனத்தால் நிதிகல்தோற்பன்
மதிவதனமுடையாளே யெங்கள்வாழ்வே
மகிழ்கின்றநிதிகுணங்கள் வாருதம்மா
யதிசடையாமுகுந்தனுறை தலங்கழ்க்கீந்த
மதிபதியுமாவானுய் வளங்கள்செய்வான். 480

கஎ நரதாங்கள்வாகனங்கள் வேறுவேறு
நடைபரியுமெழில்காடி நயந்துகொள்வான்
பரமாதர்மோகனிவன் கொள்கையாகும்
பகுத்ததையுங்காதீதன் பகர்வோம்ஞாங்கள்
நிசமாகயிம்மாதை யெப்பேதைக்கும்
நிமைப்பொழுதும்நீங்காத செல்வம்பாறு
கறைவில்லாஞானமதை யெங்கட்கீழ்த்த
கற்பகமேபலதீர்த்தங் கண்டுதோய்வன். 481

கஅ. பாலகனுக்கெண்ணத்தான் மாண்டுமேலாய்
பலிக்குமிருமாதுக்கு யேகபோகம்
சிலனுக்குஉடலுக்குள் வாய்வுவொன்று
செப்புகிரோமகத்தாலே விளைந்ததம்மா

3905

பாலனறுவாகாது வங்கபாலே
பங்கரத்தாரவேயன் ஞல்புசிக்கத்திறம்
வேலொத்தவிழியனமே யிவனுள்மட்டும்
விர்த்தியுள்ளபலன்யாதுந் துகையாச்சொன்னேம். 482

கசூ. சொற்பனமேயற்பகண்ட மிவைகளெல்லாப்
சொல்லவில்லையோகமெல்லாந் துகையாச்கொன்னேம்
விருப்புருவனுதலாளே யினிமேல்யாங்கள்
விளம்புதற்குயோகமது வேறென்றில்லை
உற்பனமாம்களத்திறமும் செய்தாய்தந்தை
உற்றுமிலன்பதவிவற்கத் தானுமாக
யெற்றகுலம்வருவாண்டு யின்னுளாக
யென்னுதவிசொல்லுகிறேம் விபரங்கேளே. 483

உ௰. மூவேழுவாண்டிலிவன் வூரின்தெற்காய்
மொழிந்தனங்கேள்கடிகையொறு காதத்துள்ளாய்
பூவேறுகுழலுடைய கன்னியொன்றை
புகழ்ந்துமணம்புரிந்திடுவான் அவளுக்கம்மா
பாலூறுமொழியுடைய கன்னியொன்று
பலிக்குமதுவையேழா மாண்டுக்குள்ளாய்
நாவேறுயிரண்டுரையா சுதனுமொன்று
நவிலுகிறேமுப்பத்தொன் மாண்டினுண்டே. 484

உக. உண்டறுக்குமாண்டுநிரை வாகுமுன்னே
உமையவளேயிவர்தந்தை பதவிசேர்வன்
வண்டுரையுங்குழலனமே யிவைகளாண்டும்
வாழ்வுண்டாய்திர்க்காயுள் வளறும்பாறு
தொண்டரென்பார்தானதுவும் யாங்களம்மா
சொல்லுகிறேம்பரமாதர் சேயென்றேது
கண்டுமொழிமாதிவனை யீன்றவன்னை
கழறுகிறேம்மவளேழா மாண்டில்மாய்வாள். 485

வேறுவிருத்தம்.

உஉ. இதிலுள்ளபலன்களெல்லா மியம்பினேமுன்னுள்தன்னில்
மதியுள்ளசுதன்குரிப்பில் வரும்பலனிமேற்சொல்வோம்
பதியற்றசந்திரயோக ஆமிவையொன்றகூரும்
விதியுள்ளகாலந்தன்னை விளம்பிடசேளுமாமே. 486

௨௩. அறுபத்துவொன்பாமாண்டி லணிகியமகரமாதம்
முருமுனம்வாய்வினாலே வுடலதுகளைத்துவாடி
சிருவனின்னுலகமநீங்கி சேருவன்கதிதானென்று
வருமையையகத்தியல்லோ மனதுரைவாழ்வேறுசொல்லு. 487

௨௪. இந்தநற்பலனையாங்க ளிசைந்தனநவக்கோளாலே
முந்தியகருமகாண்ட முறைப்படிபவமொழித்தால்
சுந்தரன்தனக்குச்சொன்ன சுகமெலாமனுபவிப்பான்
இந்திரனிரஞ்சுமாதே யெழில்சுதன்பலனிதாமே. 488

ஆகமொத்தம் 24 - பனிரெண்டாவதுஜாதகம்
முற்றிற்று.

	லக்குண	சனி சந்திரன்	புதன் சூரியன் சுக்ரன்
செவ்	இராசிசக்கரம்.		குரு ராகு
கேது			

௨-வது மேஷலக்குணம்.

௧. சந்திரன்மைந்தன்விடையில் சார்ந்திடசாடியாரல்
புந்தியுமலரிசுங்கன் புகழ்வீணைசிகிசூருவாபம்
வந்திடமன்னன்றுகு வளம்பெரும்நண்டில்தானும்
சுந்தரசுதன்தனக்கு லக்குணம்மேடமுற்றால். 489

௨. வக்கிரனிரவிபார்ப்பான் மறைதனிலிருக்கவேணும்
அக்கினியரன்றாள்பூசை யன்பரபுரிவன்செய்த
பக்குவன்தவத்தால்வந்த பாலகனுதிக்கும்போது
திக்கதுகிரகமேற்கு தெருவதுவொருபாலில்லம். 490

௩. ஒருபாலில்லமுனம் வுனதுமெதற்குவாசல்
மருவாரின்குழவியிந்த மதனைமுன்ஜெனனஞ்சேளும்
திருவாதவூர்தனக்கு சிஷனாயிருந்தானுக்கு
வருகாதயாண்டிசைக்கிழ் வளமலரெடுத்துநாளும். 491

௪. கொடுத்தவருள்ளம்போலே குறையறநடத்துநாளில்
அடுத்தவர்பதத்தைபோற்றி அருண்மொழிப்பெற்றிடாமல்
கடுத்தெதிர்வசனங்கூற கண்டவர்சாபத்தாலே
எடுத்தனன்சடலவிந்த யிளவலின்பலனைக்கேளே. 492

௫. பிறந்திடுங்காலந்தன்னில பெருந்தவமதனையன்னை
இரந்தவன்பதவிசேர்வாள் இன்புருந்தந்தைதானும்
மருமயலூரினிற்று மதிப்பினால்வந்துசேற
வருந்துணையிவனின்மூத்தோன் ஒருவனென்றுரைத்திடாயே

௬. ஒருவனுந்தென்பாலேந்து மூயர்களில்தூறத்துள்ளாய்
திருவுறுமதலைகட்கு செழுந்தமிழ்பயித்திவைப்பன்
பெரிகியதந்தையோடு பிறந்தவரிருவருக்கும்
மரிவியகுடும்பம்வேருய் வாழ்ந்திவனிறுப்பானம்மா. 494

௭. வித்தையுமிரண்டுபாஷை விளங்கியவிவேகமுண்டு
பத்தியுமகுதிசட்ரு பரிந்தனமிடுகவல்லான்
சுத்தமம்பெருகுமபத்த தோஷகையால்சினத்துபோகும்
முத்தமம்சிஷருமேல உயர்நிதியுடையோனவன். 495

௮. அசத்தியவார்த்தைசொல்வான் அடுத்தவர்க்குதவிசெய்வான்
இசையுறும்பதினாற்பாஷை யீன்றதாய்வழியிற்சன்னி
நிசமணய்புரிவனறன்பால் நீள்கவியிரண்டுதன்னில்
பிசகுறகடன்கள்கொள்ளான் பேசிலான்விருதாவாக்கே.

௯, இருபதாமாண்டில்புத்திரர் யிணங்கிடுமதற்குமப்பால்
வருவதுஆணும்பெண்ணு வருகுலாறுபேர்கள்
திருகிலஆண்செய்மூன்று தித்தடிமடவாளொன்று
பெரிகிடதீர்க்கமாகும் பெண்மயிலனமேகேளாய். 497

௰. கெட்டநோய்வந்திடாது கேளவைவந்தபோதும்
வெட்டிடாஅதிர்ஷ்டமில்லை மேலவன்யெழுபத்தொன்றில்
அட்டியேமீனமாதம் அமர்ந்திடுமமரர்பக்கம்
ஒட்டியேசதுர்த்திதன்னில் உயர்சிவபதவிசேர்வான். 498

கக. இந்தநற்பலனையாங்க ளிசைந்தனனவக்கோளாலே
முந்தியகருமகாண்டம் முரைப்படிபவமொழித்தால்
சுந்தரன்தனக்குச்சொன்ன சுகமெலாமனுபவிப்பான்
இந்திரனிறைஞ்சுமாதே யெழில்சுதன்பலனிதாமே. 499

ஆகமொத்தம் 11-இரண்டாவதுஜாதகம்
முற்றிற்று.

சூரியன் சனி		சுக்ரன் சந்திரன்	லக்குனம்
புதன் கேது	இராசிசக்கரம்		குரு
செவ்			ராகு

உ-வது மிதுனலக்குனம்.

க சந்திரன்பளிங்குநந்தி சனியொடுவலரிமீனம்
புந்தியுஞ்சிகியுஞ்சாடி புகழ்குருநண்டுமோனில்
சுந்தரஆரல்சிங்கம் சூழ்பணியமர்ந்துநிற்க
யிந்தவார்நவக்கோள்நின்று யிலமதுவீணையுற்றால். 500

(வ-ம்.) ஞண்டி-குரு அரியில்பணி மகரத்தில்ஆரல் சாடியில்புந்தி கேது சேலில் நீலன் பானு விடையில் சுக்கிரன்-மதி.

உ. இந்தசேய்பிரந்தவீதி யியம்புவேன்கிழக்குமேற்கு
இந்தயில்தெற்குவாசல் அதன்குடக்கதனில்மாயன்
சுந்தரயானைசத்தி சூழியுந்தனுவில்மானுள்
சிந்துறக்காரிதன்னுள் சிரந்ததாவாயுஞ்சூழி 501

ந. இந்தநல்லடையாளங்க ளிலங்கியசித்தார்தன்னில்
முந்துசெய்தவத்தால்வந்த முதிர்ந்தசெய்சூஸ்திரன்சேயாம்
வந்தவனென்னுட்செய்கை வருஞ்செயலின்னதென்று
சுந்தரநவக்கோளாலே சொல்லியபலன்கேளம்மா. 502

ச. பெண்ணையிரதிலடக்காய் பெரும்பனைப்பட்டிதன்னில்
மண்ணதில்பலனுண்டாகும் மாசிலாச்சைவன்சேயாய்
வன்னமாயவதரித்து வளமொடுசெய்யால்செல்வம்
நன்னிடமனைவிமக்கள் நலம்பெறவாழுநாளில். 503

ரு. சுந்தரன்தனக்குதீம்பு தொடர்ந்தவாறுரைப்பன்கேளும்
செந்திருகிருபையுண்டாம் திறம்பெருஞ்சுரபிகூட்டம்
வந்ததில்கணக்கில்லாத வண்மையொத்தனிபொன்னவை
தந்துணைக்கனிஷ்டன்வைப்பாட்டி வழகுலத்தவளின்சேய்க்கு

சு. பாலுண்பதனையீந்து பசுங்கிளங்கிழவியுண்டு
மேலதன்சோலையுற்று நீங்கிநிங்காலந்தன்னில்
சீலமின்சுதன்தனக்கு தெரிந்தவைகணதிற்சேர்க்க
பாலகனிடுக்கம்பெற்று பரிந்தனைப்பாலையுண்டு. 505

எ. பசியதுதணியகாலும் பாலகன்பிணியுண்டாகி
வசியதுபோலும்வாடி மருவன்னைப்பாலுண்ணாது
சசிமுகத்தன்னைக்குன்ற தன்துயர்களைந்தழுந்த
நிசிபினில்மரிக்கயீன்ற நேரிழையிவனேதோன்றி. 506

வேறு-விருத்தம்.

அ. உலகமதிநமன்போல ரெவராலும்
முயர்தவங்கள்நன்னூலின் றுணர்வில்வாழும்
திலகமகவுயிர்விடவும் செய்வாருண்டோ
திருக்குலத்துமனிஷ்டனிட திருக்குண்டானல்
கலகமெனமகவென்ன செய்தானேக
காசினியோமரிய விபசாரிதொந்தி
வுல்கில்மெழுவுருகுதல்போ லுருகுதெந்தன்
வுயிர்மதனையிரந்தபழி வுன்னைசுத்தி. 507

உ. பிறவிதொருமனைவிசுதன் னருஷ்டமாகப்
பெருவைவயெனவயர்பற்றி யுரைத்தாளந்த
பிரந்தலிமொழிகேட்டு யிவனுஞ்சீறி
பெருந்துன்பஞ்செய்பவனை பின்னேன்வந்து
மருமொழியுமெதிர்த்துரைக்க யிரண்டுபேற்கும்
வருததமிகவுண்டாகி மனம்வேறாகி
வெருத்திவனும்வீழ்ந்துநர கடைந்துபன்னா
ளிலக்கமவரடைந்துன்னி னிவனுமென்றே. 508

ய. செனனமதுவருந்தோரு மதுசெய்குற்றம்
சாற்றுகிறேமதின்விபரந் தாயேகேளும்
மனைவிரியுந்துணைவர்களால் விரோதமுண்டாம்
மனைவிசுதனிருவருக்கு மரிஷ்டமுண்டாம்
சினமகலதிருப்பதிவாழ் மாயோனுக்கு
சேபொன்றுஞ்சீதமதால் செய்துயிந்து
கனவேலன்றனக்கிதுநா ளபிசேகித்து
கனகமுடிக்கற்சித்தால் கன்மம்போமே. 509

கக. தந்தையுடன்பிறந்தவர்க ளிந்தமூன்றில்
தங்கைபொன்றுதீர்கமுறும் மற்றதீயும்
சுந்தரனின்றுணைநவத்துள் ளேழுமூன்றில்
சுகந்தமுள்ள ஆணொன்று பெண்பால்ரெண்டு
தந்தமுடனிருசிகப்பு வளர்த்தியில்லான்
தானுணர்தல்சொருகூணன் நனர்ச்சியில்லான்
முந்தியவன்யினத்துணை முகனுஞ்செய்யும்
மொழிமதனைமனைவியொடு பெரிதாய்வாழ்வன். 510

வேறுவிருத்தம்.

கஉ. அன்னமுமற்பமீய்வ னடுத்தவர்க்குதவிசெய்வான்
பொன்னொடுமணிநற்றுசு புகழுறசெய்யினுண்டாம்
சொன்னயப்புடைவார்த்தை சொருகூணும்சொர்னமுண்டாம்
யின்னமுஞ்செல்வம்பின்றைல் பெய்திடும்செய்பாவின்றே. 511

கந. வித்தையுந்தமிழ்தெனுங்கு விவேகமுமுடையோனாகும்
பெத்ததாய்ப்பிறந்தயில்லம் பிரபலம்சமைதிரேகம்
அற்றனர்தங்கைதன்னை லுரைந்தனமிகவுஞ்செல்வம்
பெத்தவளவினீன்றால் பேசிடில்பிலமாஞ்செய்யே. 512

கச முத்துடன்மணிகலங்கள் மொழிந்திடுந்துயில்சளற்பம்
பெத்திடும்பூமிதன்னால் பிரபலயோகமுண்டாம்
உற்றநற்றுணைவன்முன்னோன் உயர்மிகுசெல்வனாகும்
நித்தமுங்குடும்பம்வேறாய் நிலைபிலாக்கலகமாமே. 513

கரு. வேசியர்யோகமற்பம் வித்தையுஞ்செய்யாலாபம்
காசின்மேல்பிரிதியுள்ளான் கைப்பொருள்மிகவுண்டாகும்
ஆசையுமிகவுண்டாகும் மவதியால்குணமுங்கொள்ளான்
வேசையாய்வசனங்கூறுன் வுரைப்பதுநல்லற்காமே. 514

௧௬. வஞ்சகவஞ்சனாவான் வசனிப்பான்சமையும்பொய்யும்
நெஞ்சினிலிரக்கமுள்ளான் நெறிமுறைநடத்தவல்லான்
செஞ்சொலினுணுக்கந்தேர்வான் சிநேகிதபெரியோர்நேயன்
அஞ்சுகமொழியாயெங்க ளாத்துமத்துரவேசொல்லும். 515

௧௭. சுற்றத்தார்வெகுகுடும்பி செல்வற்குயற்பமுண்டாம்
சத்தியமென்றுலச்சந் தான்கொள்வான்வீணநல்ல
புத்திமான்பெரியோர்நேயன் பொருளபகரிக்கவல்லான்
வெத்தியாமுன்னோன்றன்னால் விளங்கியசெயலிலீய்வான். 516

௧௮. பலபலவாணிபத்தால் பாக்கியம்பேரும்செல்வம்
நலமுளபணிகளுண்டாம் நந்தியுஞ்சென்னலுண்டாம்
யுலவியதுன்பமற்பம் மூற்பாசம்பின்னால்நன்மை
கலகமுமற்பமுண்டாம் கனபெரியோரால்தீரும். 517

௧௯. தனமுறுங்குணவானாகும் தன்குலமனுகான்மெய்க்கான்
சொன்மொழிதவரான்வித்தை சொற்பெரியோர்மேல்நேயன்
மனவஞ்சரிடத்திற்சாரான் மைந்தரால்யோகமுண்டாம்
கனவிலும்பிரபுநேயன் கனவன்னைதன்னால்நன்மை. 518

௨௰. அன்னையால்செல்வமுண்டாம் அடையவுன்மனமுண்டாகும்
தன்னினத்தவர்களாலே தயவுருநன்மையுண்டாம்
சென்னலும்ராசியுண்டாம் செயலினையறிந்துசெய்வான்
முன்னவன்தன்னால்யோகம் முதிர்தனமுண்டாம்பாரே. 519

௨௧. இவன்தனையீன்றதந்தை யிணங்கியசுகத்தைகேளு
அவனியிற்பிரபுநேய னடைகுவன்யில்லஞ்செய்வன்
நலமதாய்பணிநற்றாசு நயம்பெருநந்தியாவும்
தவமதுசெய்வார்க்கீவன் தளர்வுரும்தயவிலானே. 520

௨௨. சென்னலும்செய்யாலுண்டாம் சேர்ந்தவர்க்குபசரிப்பான்
தன்னினத்தவர்க்குநேயன் தயவுளமுனிவன்னோனும்
அன்னமுமற்பமீய்வ னழகுள்ளான்வெகுசமத்தன்
மன்னியசெய்யாலாயம் மைந்தனால்பலன்பெத்தோனே. 521

௨௩. மூன்னுறுமாதுமைந்தன் முதிர்தனமனைவிமைந்தன்
பொன்னொடுமணிநற்றாசு புகழுறுநந்திசெய்யும்
சென்னலுத்தார்யெனங்கள் செழிப்புறசெல்வமோங்கி
நன்னலம்பெத்துவாழ்வார் நல்முறுமவனாலென்றே, 522

உச. அன்னையும்புத்திசாலி அன்புடனன்னமீய்வாள்
சொர்னமும்பணிநற்றாசு சுகம்பெறவனைவாளாகும்
தன்னுடதுணைகளந்தில் ஆணொன்றுகன்னியொன்று
மன்னியமகவொன்பானில் மகிழுறதிற்கமூன்றே. 523

திசாபலன்.

உரு. இன்னிலகுடும்பசெல்வ மிசைந்தனநவக்கோளாலே
நன்னியதிசாபலத்தின் நயந்தனையுரைக்கக்கேளும்
மன்னுகார்த்திகைமூன்றுங்கால் மகிழ்கதிர்பிற்பாகத்தில்
தன்னிலேவுதித்தசேயின் தவத்தினையுரைக்கக்கேளும். 524

உசா. அலரியின்பிற்பாகத்தில் அன்னையுந்தந்தைநன்மை
குலமதிலுத்தாற்கேடு குமரின்றுணையரிஷ்டம்
நலமிகுதந்தைதன்னால் நற்பொருள்செய்யாலாபம்
பிலமிகனாலோனால் பெருந்துணையுண்டாமென்றே. 525

உஎ. தன்னிருவருக்குகெண்டம் தனமுத்தும்பணியுமன்னன்
பின்னொருதுணையுண்டாகும் பெரும்பிணிபகைவிரோதம்
முன்னுறுந்துணைக்கிநன்மை யுரவினில்பகையுண்டாதல்
மன்னியமைந்தன்புத்தி மாதுலவற்கரிஷ்டம். 526

உஅ. தன்னுடதுணையுண்டாதல் தன்துணைவொன்றுநஷ்டம்
நன்னிலவித்தையோதல் நற்றனஞ்செய்யாலாபம்
கன்னியதுணைக்கிவேட்டல் கன்சுகிசுங்கன்பானுள்
பின்னுருதுணைக்கிநன்மை பிலமுருந்தந்தைவாதை 527

உகூ. ஆறலின்முற்பாகத்தில் அருந்துணைமுன்னோன்வேதை
தூரினால்துக்கமுற்று தூக்கினால்மடிவான்தந்தை
மாரினால்மடிந்தானென்று மனிதர்கள்பலபேர்சொல்வார்
வேரதாலன்னைசெய்வாள் விளங்குவன்விபகாரத்தால் 528

ங௰. புந்தியுமாலோன்தன்னில் பெருந்துணைசெய்யால்வேதை
வந்திடுங்கொஞ்சையீவான் வழக்கினுகுணமுண்டாகும்
பந்துவின்றுணையருஷ்டம் பெரும்பகைசெய்யாலுண்டாம்
வந்ததுபெரியோனாலே வழக்கதுசமதையாமே. 529

ஙக. பணியொடுமன்னன்மைந்தன் பாக்கியபசெய்யாலாபம்
அணியுருமாமன்கன்னி வழக்குரமணத்தைசெய்வான்
பிணியுரும்குணமுண்டாகும் பின்றனைநஷ்டமுண்டாம்
அணிபணியாடைநந்தி அருந்தனம்செய்யாலுண்டாம். 530

௯௨. அன்னையேசெய்யாலாபம் அற்பருல்பகையுண்டாகும்
முன்னவன்முனியுண்டாகும் முநிர்தனமற்பமிய்வான்
கன்னியர்தனக்குூனமை கனபொருள்பின்னுனுண்டாம்
அன்னியகரசன்தன்னு லமர்ந்திடுவழக்குயல்பம். 531

௯௩. புந்தியுஞ்சிகியுஞ்சுன்னும் புறவலன்தன்னுல்நன்மை
வந்திடும்பொருளுநஷ்டம் வகைதுகைமுன்பின்னுகும்
செந்திருகடாக்ஷத்தாலே செயம்பெறுமற்பமுண்டாம்
மைந்தர்கள்வந்துதோன்றும் மலினமும்பீடையுண்டாம். 532

௯௪. முந்தியவினையைநீக்கில் முதிரதசெய்திற்கபாகும்
முந்தியதுணைவன்மாது மூழ்வினைக்கண்டமுண்டாம்
தன்துணைவர்க்கவேட்டல் தாயாதிசுபாசுபங்கள்
மைந்தனும்கன்னியுண்டாம் வலியமாய்வழக்குண்டாமே.

௯௫. அலரியுமாலோனுற லரும்பிதுர்வற்கமெண்டம்
குலவியமாதர்கஷ்டம் கொடுந்துணைபிணியால்கஷ்டம்
நலமுருஞ்செய்யாலாபம் நற்றனந்துணைவர்வேட்டல்
பிலமுறும்புதல்வன்கன்னி பிரந்திடும்பவமொழித்தால். 534

௯௬. மன்னவன்மைந்தன்புந்தி மைந்தனுங்கன்னிவேட்டல்
அன்னையும்வர்க்கநஷ்ட மருந்துணைப்பொருள்வந்தெய்தும்
மன்னியயில்லஞ்செய்வான்மக்களால்செய்யிலுண்டாம்
தன்னுடதனுவிற்பீடை தையலாள்தனக்கரிஷ்டம். 535

௯௭. சிகியொடுசுன்னும்பானுள் சிவதலஞ்செய்வந்தெய்தல்
நகையொடுவெங்கலங்கள் நாணயம்பலவந்தெய்தும்
அகமிகமகிட்சியெய்தும் ஆளடியாபரணமுண்டாம்
துகையதாய்தனமுண்டாகும் துணையற்குவருமரிஷ்டம். 536

௯௮. சந்திரனால்ராகு சகலசம்பத்துமுண்டாம்
சுந்தரசேய்க்கிவேட்டல் சுகமுறுங்கன்னிமைந்தன்
தனதநுமற்பபீடை தாயுடன்வற்கதீதாம்
வந்திடுமொருவன்செய்யை வாங்குவரீதிக்கியம்மா. 537

௯௯. மைந்தனும்புந்திகேது மங்கையர்மைந்தன்நஷ்டம்
சுந்தரப்புதல்வருண்டாம் சுகமுருஞ்செய்யாலாயம்
செந்திருகடாக்ஷமுண்டாம் சிருவனுல்யோகமுண்டாம்
தந்தையின்வர்க்கரிஷ்டம் தையலாள்தனக்கரிஷ்டம். 538

௪௰. சுங்கனுமலரிஆலோன் சுந்தரசெல்வந்தன்னை
யிங்கிதபுதல்வர்க்கிய்வன் யேந்திழைவற்கந்திதாம்
அங்கமும்வெளுத்துவாடும் அன்னமும்வெருப்புதோன்றும்
மங்கலில்வருழ்பதிங்கள் மருவியவடிப்பினின்றோன். 539

௪௧. தனதனுவிட்டுஆவி தனிபிமன்னவரஞ்சார்ந்து
பந்தமாம்வினைஅகன்று பார்தனில்வணிகன்சேயாய்
வந்தவநவதரிப்பான் வளம்பெருஞ்செல்வமேலாம்
யெந்தநற்சபைசென்றாலும் யிவனுடவசனமேலாம் 540

௪௨. யிந்தநற்பலனையாங்க ளிசைந்தனநவக்கோளாலே
முந்தியகருமகாண்ட முறைப்படிபவமொழித்தால்
சுந்தரன்தனக்குச்செசன்ன சுகமெலாமனுபவிப்பன்
யிந்திரனிரஞ்சுமாதே யெழில்சுதன்பலனிதாமே. 541

ஆகமொத்தம் 42-மூன்றுவதுஜாதகம்

முற்றிற்று.

		சுக்ரன்	புதன் சூரியன்
குரு கேது	இராசிசக்கரம்		
			ராகு செவ்
	சந்திரன்	சனி	லக்குண

உ-வது கன்னிலக்குணம்.

௧. சந்திரன்றேளிருசி சனிதுலைநங்கிசுங்கன்
புந்தியுமலரிவீணை புகழ்குருசிகியும்சாடி
சுந்தரப்பணியுமால் சூழ்புவியில்லமேவ
யிந்தவார்நவக்கோள்நின்று [illegible]துகன்னியுற்றால். 542

௨. இந்தசேய்பிறந்தவீதி யியம்புவேன்கிழக்குமேற்கு
அந்தயில்தெற்குவாச லதன்றுடக்கதனில்மாயன்
சுந்தரசத்தியானை சூழ்தனுசூழிமானில்
விந்தையாய்காரிவெண்டில் விளங்கிடுஞ்சூழியொன்றே. 543

௩. இந்தகல்லடையாளங்க ளிலங்கியசித்தூர்தன்னில்
முந்துசெய்தவத்தால்வந்த முதிர்ந்தசூஸ்திரதன்சேயா
வந்தவனின்றுள்செய்கை வருஞ்செயலின்னதென்று
சுந்தரநவக்கோளாலே சொல்லியபலன்கேளம்மா. 544

௪. வந்தமுற்செனனந்தன்னை வகுக்கிறேம்தேவிகேளும்
சுந்தரவந்திநாட்டிற் காணியுற்குலத்துச்சேயாய்
வந்தவநவதரித்து வளம்பெருகழணியாமே
சிந்தையுங்களிக்கச்செல்வஞ் செழித்திடவளருநாளில். 545

௫. அந்தநன்றுட்டிலுள்ளோ ரருந்தாகசோயமற்று
சிந்தையுங்களிக்கத்தண்ணீர் சிரங்கிடச்சாலைவைத்து
வந்திடுமனுக்களன்னீர் வாய்மடுத்துண்பதற்கு
அந்தணன்தேவியென்றே யாங்கவையிணைவைத்து. 546

௬. நேசமும்தவறுநாளும் நெறிமுறைநடத்துநாளில்
தாமதர்க்கிசைந்தமாது சற்குணமுடையாள்கற்பு
காமத்துக்குணங்கள்பெத்த காளடிக்கன்புவைத்து
சேமநற்பொருள்களன்றி சிறுமையில்மெலிந்தமாது. 547

௭. அங்கவையோராண்டுக்கு அங்கணமிருந்துதாகம்
தங்கினர்சோடமாத்தி தண்மைகூர்ந்திருககுநாளில்
யிங்கிவன்றன்னையோர்நாள் யெனக்குளசம்பளத்தை
சங்கைநேர்க்குன்மமாவில் லாதரன்தரன்றுள்மட்டும். 548

௮. பெத்திடாதிருந்தேதந்தை பெருமணம்வைத்துபின்றுட்
சித்தமொத்தீய்வாயென்றுல் சிறுவனுமதனைக்கேட்டு
யித்தனத்தின்றுள்மட்டும் யெங்கிருந்திசனங்கொண்டாய்
அத்துடன்சரியேயென்று வரைந்தனனதனைக்கேட்டு. 549

௯. சொன்னதைகேட்டமாது துயரமுற்றெதிரில்நின்று
என்னுடசொத்துறுலே யென்பயநடைவாய்நீயும்
பொன்னதினுசைப்பொல்லாப் புகழினைகெடுக்கும்நோக்கும்
நன்னியமில்லைவேறு நம்பினரில்லையென்றுல். 550

ம. யென்றவனுரைத்தவார்த்தைக் கினியினியிருக்காயென்ன
யென்றவந்தனைக்கேட்டு யகங்காரமுடையனாகி
நின்றவன்தன்னைநோக்கி நீயினிப்பிறவிதோறும்
மன்றியமனைவிமக்கள் மானிதிகுணவானுகி. 551

கக. வருஞ்சுகமதிகமின்றி வலியுளனாவாயென்று
யிருவிழிநீர்கள்சோர வியம்பிதன்னூருசேர்ந்தாள்
யருமலர்வதிவான்றன்னால் வகுத்திடும்விதினுள்மட்டும்
பெருமிதவில்லந்தோற்று பிணியினுலாவிற்று. 552

கஉ. யருநரகடைந்துமாவி யதிலுழந்தனேகதுன்பத்
தருவருப்புடையோனுகி யென்வரியிலக்கம்புக்கி
பெருகியவையந்தன்னில் பிரந்திவன்வணிகனுகி
மருவியசெனனந்தன்னில் வைந்தருஞ்செல்வமின்றி. 553

கங. பின்னிந்தசெனனமாக பிறந்தவகிவனையம்மா
மன்னியவந்திசாபம் வந்திடுஞ்செனந்தன்னில்
வின்னஞ்செய்விபரந்தன்னை விளம்பிடக்கேளுமின்னுள்
சொன்னதுபோலேசெல்வம் சோர்வுநஞ்செய்புருதே. 554

கச. அன்னவைதீர்த்துசெல்வத் தடைந்திடவேண்டுமின்னுள்
யின்னிலஞ்சோழனுட்டி லிசைந்திடுமரைக்கா...னில்
அன்னையுந்தந்தையோடு வன்புற...தங்கள்
சென்னிவொண்டரியா...தந் தெரிசித்துவாரந்தங்கி. 555

கரு. அந்தணன்மனைவிகற்பா ளவமாதுவொருத்திசையிற்
சுந்தரவாடையேமம் சுகம்பெறவளித்துமேமம்
சந்ததியடையாகட்டு சந்தமாயன்னமீந்தால்
முந்தியபவங்கள்போகும் மெய்க்குழல்மதனைதீற்கம். 556

கசு. முந்தியவினையுஞ்சொன்னேம் மொழிந்திடக்கேளுமம்மா
தந்தையின்துணைநவத்து ளாறேன்றுகன்னியொன்று
தன்துணைநவத்துள்தீற்கம் ஆணைந்துகன்னிரண்டு
தந்தைக்கியிரண்டாந்தாரம் தையலின்றனையனுமே. 557

கஎ. சுந்தரகிருசிகப்பு சுகமுளான்சமைதிரேகம்
வந்திடும்நன்மையுண்டாம் வளங்களுமெத்தவுண்டாம்
தந்தையாலதிகயோகம் தந்திடுங்குணவானுகும்
பந்துவில்தனிகனுகும் பற்பலசெல்வமுள்ளான். 558

௧௮. வித்தையுமொன்றுண்டாகும் விளங்குவன்கணக்கில்கொஞ்சந்
தந்தைபார்க்கன்பனுவன் தனமுளான்றனக்குநேயன்
புத்தியிலூகவானும் புகலுமேவாமற்பகோபி
சத்துருவெவருனாலும் சமதையாயடுத்துவெல்வான். 559

௧௯. நல்லவனென்பார்நல்லோர் நயப்பினையரிவானாகும்
சொல்வதிகவடுமுண்டு சுற்றத்தார்சேர்க்கையுள்ளான்
வெல்லுவனெதிரிதன்னை வழக்கோரமிவனுஞ்சொல்லான்
யில்லறத்தோர்க்கையாவன் யின்பமுமடைவானென்றே. 560

௨௰. சொல்லுவோம்பிதாவினாலே சுகமதுமெத்தவுண்டாம்
அல்வதுமகன்றேபோகும் மாவொடுநந்திகூடும்
நல்லவன்பெரியோருக்கு நயப்பரிந்தீய்தலற்பம்
புல்லரைவணக்கஞ்செய்வான் புண்ணியஞ்செய்தலற்பம். 561

௨௧. பெருகியவிவேகமுண்டு பேசுவன்வினோதவார்த்தை
திருவுரைகுலத்தாரிஷ்டம் தீங்கதுஒருவர்க்கேதான்
யிருவினையரிவான்கோபி யெளியவர்க்கன்பனாகும்
வருஞ்செயலரிந்துநன்மை வளம்பெருஞ்செய்யாலாபம். 562

௨௨. தந்தையின்புகழைச்சேரு தனமொடுசெய்யுமில்லும்
வந்திமம்பணிதாருவும் வளம்பெருநந்தியாவும்
சிந்தையுங்களிக்கவெய்து செய்வதையரிந்துசெய்வான்
அந்தணர்பெரியோர்தங்கள் மதிவிசுவாசமுள்ளோன். 563

௨௩. அன்னைகேள்செய்யாலாபம் அற்பமையுமவுகொள்ளான்
நன்னயமிருதுவார்த்தை நல்வரிணக்கமுள்ளோன்
சொன்னசொல்பிசகுறாது சுகம்பெறவாழ்வானாகும்
தன்னினத்தவர்க்குமேலாய் தனமொடுதனிகனாவான். 564

௨௪. வித்தையுமற்பமுண்டு விளம்புவன்கணக்குகொஞ்சம்
சித்தமும்தயவுகொஞ்சம் சிவனடியார்கள்நேசன்
முத்தியைவிரும்புமிச்சை முகுந்தனைபணிந்துகொள்வான்
சத்தியவசனனாகும் சஞ்சலப்புத்தியுள்ளான். 565

வேறுவிருத்தம்.

௨௫ நிலமதனாற்பலனுண்டு நிதிகையுண்டு
நேமிதனைக்காத்தளித்தோன் தயவினாலே
கலன்மணிகள்தார்விளம்பில் மாயிக்கூடும்
காஞ்சினத்தால்நாணயமு மன்பாய்கூடும்

நிலம்பதித்தமனையாளும் புத்தியுள்ளா
நிசைவரிந்துதருமத்தே நடத்துவல்லான்
புல்நஞ்சைதானியங்க ளதிகமுண்டு
பூதலத்தில்வெகுமனுக்கள் நேயமுண்டு. 566

வேறு-விருத்தம்.

௨௬. தந்தைநாள்புகழுங்கீர்த்தி தனமொடுசெய்யுமில்லும்
மைந்தர்களுதித்தபின்னால் மருவிடும்செல்வமெல்லாம்
சிந்தையுங்களிக்கயெய்தும் செப்பெனுந்தையல்செய்வான்
தன்னிடதுணையாள்மைந்தன் தனமொடுசெய்யுமில்லும். 567

௨௭. பொன்னொடுமணிதாருவும் புகழுறவாழ்வானாகும்
தன்னிடமைந்தராலே தனமொடுசெல்வமுண்டாம்
முன்னுறுமனையாள்மைந்தர் முதித்தபின்செல்வமேலாம்
தன்னிடதந்தைகீர்த்தி தாரதம்மிலமாய்சொன்னோம். 568

௨௮. அன்னையும்புத்திசாலி அன்புடனன்னமீய்வான்
சொர்னமும்பணிதாருவும் சுகம்பெருமனையாளுக்கும்
மன்னியகணவன்சொல்லை மருத்தெதிர்வசனங்கூறாள்
அன்னையின்துணைபன்னொன்றி வாண்ணுலுகன்னிமென்மை

௨௯. மன்னியமனைவிமக்கள் மாதொடுபணிகற்றாசும்
பொன்னொடுசெய்யுமில்லும் புகழ்பெறவாழ்வானாகும்
நன்னயவெங்கலங்கள் நாணயமிகவுண்டாகி
கன்னியுங்கணவனாலே கனம்பெறவாழ்வாளென்றே. 570

௩௰. முந்தியதாரமைர்தன் முதிர்தனஞ்செய்யுமில்லும்
மைந்தனும்பணிநற்றாசும் மணியொடுசெய்யுமில்லும்
சுந்தரமாகவாழ்வான் சுகமிருபாகம்வேறாய்
தன்தனம்பெருகவாழ்வான் தந்தையால்யில்லம்மேலாம். 571

திசாபலன்.

௩௧. இன்னலங்குடும்பச்செல்வ மிசைந்தனவக்கோளாலே
நன்னியதிசாபலத்தின் நயந்தனையுரைக்கக்கேளாய்
மன்னியகேட்டைரெண்டில் மகிழ்புதனாலோன்புத்தி
தன்னிலேயுதித்தகேயின் தவத்தினையுரைப்பன்மாதே. 572

௩௨. சந்திரனால்தன்னில் தாயுற்றார்தந்தைநன்மை
சுந்தரத்துணையுண்டாதல் சுகம்பெருஞ்செய்யாலாபம்

தந்தையால்வருகுநன்மை தனுவினிலற்பபீடை
வந்திடும்பணிதாருவும் வளம்பெருநிதியுமுண்டாம். 573

௫௩. அன்னையேயரவுமன்ன னற்புதனங்களுண்டாம்
சென்னலால்சொர்னமுண்டாம் செழும்பிதிர்வற்கவேட்டல்
அன்னையின்வற்கவேட்டல் யலங்கிர்தசடங்குமுண்டாம்
மன்னியபணிநற்றாசும் மாதவன்தனக்குயெய்தும். 574

௫௪. அன்னியவழக்குதீர்த லரும்பொருள்வந்துசேர்தல்
தன்னினத்தவர்கள்நேயம் தாயாதிஅதிகநன்மை
மன்னியபிலங்தொடுத்தல் மகருஜன்றயவுண்டாகும்
முன்னுறுஞ்செய்பாலாபம் மொழிபிதுர்வற்கவேட்டல். 575

௫௫. மதிதனில்வித்தையோதல் மாதுலன்தனக்குவேட்டல்
தந்தையின்வற்கநன்மை தாய்குலம்விர்த்தியாகும்
சொந்தமாய்முதலுண்டாகும் சுசமுறுந்தந்தைக்கென்றுந்
தந்தைதாய்வற்கரிஷ்டம் தன்துணைதனக்கரிஷ்டம். 576

௫௬. சிகியவன்மூற்பாகத்தில் சீர்பிதர்மாதரிஷ்டம்
நகையொடுவெங்கலங்கள் நாணயம்பலவாறுண்டாம்
அகமகிழில்லமுண்டாம் அற்பனால்பகையுந்தீரும்
துகையதாய்சுனமூண்டாகும் சுகமுடன்வற்கநன்மை. 577

௫௭. அன்னைகேள்சிகிபிற்பாகம் அருந்துணைதனக்குவேட்டல்
பொன்னொடுசெய்பாலாபம் புகழ்பிதுரன்னைகண்டம்
மன்னனால்செய்பாலாபம் மகருஜன்றயவுண்டாகும்
அன்னையின்தந்தைபீடை அவள்சுதன்தனக்குநன்மை. 578

௫௮. சுங்கனுமலரியாலோன் சுகமிகுவன்னைவற்கம்
யிங்கிதக்கன்னிவேட்டல் யெய்திடும்பின்னோனுக்கு
வெங்கலம்பணிதிசெம்பொன் விருதமாய்நந்திதாசும்
சங்கரனருளாலெய்தும் சாற்றுவோம்பிதாவருஷ்டம். 579

௫௯. ஆறனுமரவுமன்னன் னற்புகச்செய்பாலாபம்
சீர்பெருந்தந்தைகண்டம் சிறுதுணைஒன்றுநஷ்டம்
பேர்பெரும்பெரியோன்மாதர் பிணங்கினால்விவாகம்வேரும்
சாற்புருதந்தைநாளே தனித்தனிபாகம்வேரும். 580

௬௰. மந்தனும்புந்திகேது மைந்தனுங்கன்னியுண்டாம்
செந்திருகடாக்ஷமுண்டாம் சிறுவர்கள்துணைவேருகும்
பந்துவில்லொருவன்செய்யை பலமுரவிலக்கிக்கொள்வன்
வந்திடுவழக்குநஷ்டம் வளம்பெருமாசால்தீரும். 581

3905

௪௧. அலரியின்திசையவன்னில் அன்னையுமரிஷ்டகண்டம்
நலமிலைபிதிர்வர்க்கங்க நலிந்திடும்பிணியால்கண்டம்
குலமதினூற்றார்கேடு கொம்பனாள்தனக்குபீடை
நலந்தரும்மாமன்கண்டம் ஊதயலாள்வர்க்ககண்டம். 582

௪௨. சந்திரனாரல்ராகு சாற்றுவோமன்னைகண்டம்
சுந்தரப்புதல்வநன்மை சுகமிகுநந்தியுண்டாம்
சொந்தமாய்சகடம்நந்தி சுகமிருமனையரிஷ்டம்
மைந்தருங்கன்னிவேட்டல் மக்களால்யோகமுண்டாம். 583

௪௩. மன்னவன்மைந்தன்புந்தி மனையவள்தன்னால்யோகம்
சொர்னமும்சென்னதன்னால் சுகமிகுகுடும்பமேலாம்
அன்னதானங்கள்செய்வன் அரசரால்பகைபுநஷ்டம்
மன்னியசிகிசுன்பானுள் மாதுலவர்க்குகண்டம். 584

௪௪. மங்களதிசையதன்னில் மகிழ்வுருமினத்தான்செய்யை
யிங்கிதவிலைக்கிவாங்கி எழிலூரவனுபவிப்பன்
பங்கினாற்பலவழக்கம் பார்புகழ்கோனாற்றீழும்
யிங்கிதமைந்தன்தன்னால் எய்திடுமதிகயோகம். 585

௪௫. பணியொடுமன்னன்மைந்தன் பாக்கியந்தனுவருஷ்டம்
அணிபணியாடையாவும் அலங்கிர்தசெய்யாலுண்
மணிமுதல்ரத்தினங்கள் மைந்தனாலதிக[illegible]திம்
பிணியுரும்சிகிசுன்பானுள் [illegible]லகண்டமாமே. 586

௪௬. தன்னிடபொருள்யெல்லாம் தனிப்பெருமகவுக்கீய்வான்
ம[illegible]மஆவணியிற்றிங்கள் மகிழுமஷ்டமிதிதிதன்னில்
அன்னமும்வெருப்புத்தோன்றி அழகியசடம்விட்டாவி
தென்னகர்அடைந்திகின்றான் திகழ்பூமிதனிலுதிப்பான். 587

௪௭. இந்தநற்பலனையாங்க ளிசைந்தனனவக்கோளாலே
முந்தியகருமகாண்டம் முறைப்படிபவமொழிந்ததால்
சுந்தரன்தனக்குச்சொன்ன சுகமெலாமனுபவிப்பான்
இந்திரானிறஞசுமாதே யெழில்சு[illegible]பலனிதாமே. 588

ஆகமொத்தம் 47 - நான்காவதுஜாதகம்

முற்றிற்று.

	செவ்	கேது	
சந்திரன்	இராசிசக்கரம்.		
சூரியன் சுக்ரன் புதன்			
லக்குண	ராகு	குரு	சனி

௨௰வது தனுசுலக்குணம்.

௧. சந்திரன்சாடிமேவ சனிபெருங்கன்னிதன்னில்
சுந்தரலலரிசுங்கன் சூழ்புதனமானிற்றேனில்
வந்திடும்பணியுநந்தி வளர்சிகிதுலேயில்மன்னன்
சுந்தரமேடமாரல் சூழ்தனுசினிலுதித்தால். 589

௨. யிந்தசேம்பிரந்தனீ யியம்புவேன்கிழக்குமேற்கு
அந்தயில்தெற்குவாசல் அதின்குடக்கதனில்சந்தாம்
சுந்தரத்துலேயில்மாயன் சூழ்கரிசத்திபொன்று
வந்திடுங்கும்பங்காரி வாள்சத்திகடகம்சூழி. 590

௩. இந்திரத்தனுவிசூழி இசைந்திடும்சிற்றூர்தன்னில்
முந்துசெய்தவத்தால்வந்த மூதிர்ந்தசூஸ்திரதன்சேயாம்
வன்னவனென்னுட்செய்கை வருஞ்செயலின்னதென்று
சுந்தரநவக்கோளாலே சொல்லியபலன்கேளம்மா. 591

௪. திருப்பதிநகரமேற்கில் செகனுதநகரந்தன்னில்
மருந்துவகுலத்தில்வந்த மகனுகவந்துதோன்றி
பொருப்புரபூமியாலே பொருளதுபெருக்கமாக
கருப்பறசெல்வமோங்கி கருத்துறவாழுநாளில். 592

௫. கன்னியுமிவனுங்கூடி கலந்தினம்நதியின்மூழ்கி
யினேபவங்கழிக்கவுன்னி எழுதியகிஞ்சாகில்லிற
துணையெனவைகியங்கு சுந்தரநதியிலாடி
யனேந்தந்தயில்லந்தன்னில் நீயருசுவையரிந்திலாயே. 593

௮. முப்பினில்வந்துநல்லோர் மொழிவழிவசனங்கூறி
சுகத்தவப்பசனையங்கு சொல்லியேயிற்கும்நேரம்
பகலருயசலிலாத தோரிளவலத்தம்சேயாம்
யிகமகிழ்ந்திவன்பால்வந்து யின்பாயிருந்துபோகும். 594

௭. யிவன்குறங்கதனில்லேனி யிருந்திடுஜயமோதி
அவன்படுகடற்களித்து யிடிபட்டுவொன்றுக்கொன்று
யெவர்களுங்காணவீதி யெய்திடயிவன்விட்டோட
தவமுறச்சேபையானை தான்சுடர்தரையிற்றேய்க்கும். 595

௮, சுந்தரிதன்னால்மாண்டச் சுதன்தனைக்கையிலேந்தி
கதையிதோசிவனேயென்று கதரிவாயலகச்சொன்னாள்
சுதனைவிட்டுனதுபாவி சுகம்பெறநடுமுண்டாம்
சுதனனையிரண்டுமின்றிச் சொல்லினதூலசாந்தான். 596

௯. அங்கதேவிசனமாக அவன்விதிநாளைப்போக்கி
திங்குறயாவிரேற்று சென்றுபாழ்நரகம்புக்கி
ஆங்கதிலனேககால மடைந்துபலதுன்பத்துற்று
தேங்கமிழ்கமலத்தோன்கை தீட்டியதிலக்கம்புக்கி 597

௰. அலைகடலுலகம்புக்கி யாவையிச்செனனமாக
குலமகள்வருணனுன்கி கோலமாநாமம்...
நலமுளதலவனென்று நா...மநன்மையாக
சேயுமுன்மரித்த...வம்சேர்ந்திவன்தன்னைச்சூழ்ந்து. 598

௧௧. ...ய்வகையின்னதென்று கழறுவோமிச்சென்மத்தில்
தாய்மணம்புரிந்தடக்கு சுதனொன்றும்தரித்திடாது
தோய்மதிமுகத்தாமித்தீ தூயனைமரிப்பாளென்றே
நேயமாஞ்சந்திரநாடி நிகழ்த்தியப்படியேகாணே. 599

௧௨. துடர்பவங்கழித்தசேயன் சுகம்பெறவேண்டுமென்றால்
வடர்திருமனைவியோடு மனமொதுசேதுக்கேகி
திடம்வெள்ளிபலந்தானேந்தில் சேயொன்றுமறையோர்கேய்ந்து
யிடமுறுபாடிபாடி யெழின்மறைமொழிவார்சங்கை. 600

௧௩. யினியெவைசெய்தபோதும் யினிபவந்துலைந்திடாது
கனியொடுமவதான்செய்ய கானாலாமகவின்செல்வம்
துணையிவையின்றிவேறு தான்மணஞ்செய்தபோதும்
மணிமதிமுகத்தாய்செல்வர் பாவிப்பதில்லையென்றேதே. 601

௧௪ தந்துளமகிழ்ச்சிகொண்டு தான்சுகமடையவேண்டில்
யினமெனுநடையாரிவ்வா றரைந்தனம்வேதனுண்மை
யினியவையுண்மையோடு யின்புறசெய்வதானார்
சனியெனவாண்பாலொன்று கன்னியொன்றிரண்டுதீற்கம்.

௧௫. யிந்தவாரிசைந்தோநாட்டி லிணங்கியபவக்கைதிர
சொந்தநற்குடும்பச்செல்வம் சொல்லிடக்கேளுமம்மா
தந்தையின்துணைநவத்து வானொன்றுகன்னியொன்று
தன்துணையைந்துதீற்கம் தானொன்றுமுன்னோனென்றே. 603

௧௬. அன்னவனிருசிகப்பு வளவிலான்சவைதிரேகம்
கன்னலின்சுவைபோல்வார்த்தை கருதுவன்னினியபாஷை
மன்னியசெல்வமுள்ளான் மகிழ்தந்தைதன்னால்யோகம்
நன்னியமிருதுவாகும் நயமுளானன்னைதன்னால். 604

௧௭. வரும்பிதுர்பூமிசெல்வம் வகுத்திடக்கேளுமம்மா
திருவருளிவனாலுண்டு செயம்பெருஞ்செய்யாலாபம்
வருவரைவசித்தேவெல்வன் மனத்தினில்யூகவானாம்
சிருவனையுறவுகொள்ளான் சிநேகிதநேயனாவான்.. 605

௧௮. குண[illegible]சீலனாகும் குரிப்பினில்கொடுமைதோன்றும்
கணக்கினில்யூ[illegible]க்க காரியாகாரியங்கள்
தளபதியெவையுஞ்செய்வா[illegible]தரியமனத்தனாகும்
கனவிழியமுதேயெங்கள் கருத்து[illegible]ரயமுதேசொல்லும். 606

௧௯. அடுத்தவர்க்கன்புமிகக வசர்மீயவார்த்தைகூறான்
தொடுத்திடும்விபகாரத்தை சோர்வரிந்தெவையுஞ்செய்வான்
கொடுப்பதைவழக்கான்வீண்வாய் கூரிடான்பெருமையில்லன்
நடத்திடுங்காரியங்கள் நன்மையேதின்மையென்றே. 607

௨௰. தன்னுடநாளில்பூமி தானுண்டுபிதுர்நாளுண்டு
பின்னங்கும்மனையுங்கொண்டு பிரபலபில்லைஞ்செய்வான்
பொன்னதார்பூமிகொண்டு புகழுளசெல்வம்பெற்ற
பின்னொடுபிறப்பின்பேரில் பெருமிதனேயமுண்டாம். 608

௨௧. செய்தனிற்பிரியனாகும் செல்வர்க்குமிகவேயுண்டு
கைமுதற்பெருக்கமாக கணக்கின்மேலெவையுஞ்செய்து
வயவந்தபிரபுவாலே யுண்மைகள்மிகவேயுண்டாம்
மெய்மொழியுடையோனாகி விர்த்தியுஞ்செய்யாலாயம். 609

உஉ. நற்சுகம்தந்தைசெல்வம் நயம்பெருபகைக்ககேளாய்
யேர்புரிதாகயங்கு யெழினுறவில்லமேய்ந்து
சொற்பிரகன்றியல்லோர் சுகமதிபல்லோர்நேயன்
வுற்பனவிவேகத்தாலே வுயர்செல்வம்பெற்றுவாழ்வன். 610

உ௩. வரும்பிதுர்செல்வமற்பம் வண்டியுநந்தியுண்டு
பெருமிதமாவுமாகும் பிரபலசேர்க்கையுள்ளான்
குருவொடுமறையோர்பல்லோர் குணமறிந்தியவல்லன்
அருமையாக்கட்டில்மெத்தை அழகுளமனிதருலும். 611

உ௪. பெரும்பக்கம்சஷ்டிவாரம் பேசியதிங்கள்மூன்றும்
வருந்தினமறிந்துகந்தன மகிழுறவபிசேகங்கள்
பெருமிதமாகசெய்து பிரமணர்நூறுபேற்கு
வுருவுடன்னசனமீய்ந்து வுகந்திடாவற்பநோயே. 612

உ௫. தந்தனங்கொடுக்கல்வாங்கல் தாயாதுதனக்குமேலாய்
மிந்துயர்செய்புமில்லும் வேண்டியபணிதியாடை
நந்தியும்யேர்பெருக்கம் நற்சுகமிவுண்டாதல்
சிந்தையும்களிக்கச்செல்வம் சிறப்புறவாழ்வானென்றே. 613

உ௬. தந்தைதன்தனமுமற்பம் தனிததசேயில்லா...ம்
தந்தையின்தாரமைந்தன் தனமொ...தல்வனோடு
சுந்தரமாகவாழ்வார் சு...பருமிவன்றன்னுளில்
வந்திடுமிரண்...தாரம் மைந்தரில்ஒருவன்யோகம். 614

௨... முந்தியதாரமுன்னோன் முதித்ததுசுசங்கொடாது
பிந்தியமைந்தன்தனால் பிலத்திடும்பூமிசெல்வம்
வந்திடும்வழக்கைவெல்வான் வளம்பெருஞ்சென்னனுண்டாம்
பிந்தியமனையாள்தன்னால் பெருஞ்செல்வமுண்டாமென்றே.

உ௮. தந்தையின்புகழைச்சொன்னோம் தன்னிடதுணையில்மூத்தோ[ன்
சுந்தரச்செல்வம்யாதும் சொலனுமேவாமவன்குறிப்பில்
பிந்தியவன்னைமைந்தன பிலமில்லையொன்றுகண்டம்
வந்திடுந்துணையிலொன்று வளத்தினைகுறிப்பிற்சொல்வோம்.

உ௯. அன்னையும்புத்திசாலி அம்மையிலடைவாள்கண்டம்
பின்னொறுமாதுநல்லாள் பெத்ததாய்சமதையாகும்
அன்னவதன்னால்யோக மடைந்திடுஞ்செல்வமுள்ளான்
தன்னிடகணவனசொல்லை தடையிலாநடத்தைசெய்வாள்.

திசாபலன்.

௬௰. பின்னவன்குடும்பச்செல்வ மிசைத்தனநவக்கோவாலே
நனணியதிசாபலத்தின் நயந்தனையுரைக்கக்கேளாய்
மன்னியசனிதையமொன்றில் மகிழ்பணிமன்னன்புத்தி
தன்னிலையுத்தசேயின் தவத்தினையுரைப்பேன்மாதே: 618

௬௧. மன்னவன்மந்தன்புத்தி மாதவள்பிணியால்கண்டம்
தன்னுடதுணையில்நன்மை தந்தையின்வர்க்கந்தீதாம்
பின்னுறுசுபமுண்டாகும் பின்துணைபின்மாதுண்டாம்
சொர்னமுபசெய்யுமுண்டாம் சுகம்பெருமதனிதாச்சே. 619

௬௨. சிகியொடுசென்னும்பானுள் சிவதலந்தீர்த்தவாசம்
பகையொடுவெங்கலங்கள் நாணயம்செய்யுண்டாகும்
பகையிடரதனுலுண்டாம் பாக்கியம்செய்பாலாபம்
மிகவுந்துணையுண்டாகும் மிருவற்குசுபாசுபங்கள் 620

௬௩. தந்தனுவற்பபிடை தன்துணைநஷ்டமுண்டாம்
வந்தநற்வழக்குதீரும் மருமதியில்லந்தன்னில்
சுந்தரத்துணையின்கண்டம் சுகம்பெறவற்கமநன்மை
பிந்தி[illegible]துணையுண்டாகும் பெருந்தமையனுக்கரிஷ்டம். 621

௬௪. மன்னவன்மந்தன்பு[illegible] மாதுலவற்குநன்மை
தன்னுடவற்கவேட்டல் தன[illegible]மனைஞென்வேட்டல்
தன்னுடதனுவில்பீடை தந்தைதாயரிஷ்[illegible]
சென்னலும்செல்வமுண்டாம் செப்பியயிலமுண்டா[illegible] 622

௬௫. சிகியொடுசென்னும்பானுள் சிவதலந்தீர்த்தவாசம்
நகையொடுவெங்கலங்கள் நற்பணிநனினத்தூசும்
யில்லரரிடபகோணம் யிசைந்திடும்கன்னிவேட்டல்
துகையதாய்தனமுண்டாகும் தாய்தந்தையரிஷ்டகண்டம்.

௬௬ சந்திரனாலராகு சகலசம்பத்துமுண்டாம்
தந்தையின்வற்க்ககண்டம் தந்தையுமடைவான்கண்டம்
பிந்தியமாதுமைந்தன் பிரபலமணங்களிண்டாம்
வந்திடுமில்லந்தோன்று வளம்பெறபிரித்துவாழ்வான். 624

௬௭. மந்தனும்புந்திகேது மற்றந்ததுணைவர்க்கங்கள்
சுந்தரமைந்தன்கன்னி சுகம்பெறவந்துதோன்றும்
சிந்தையிலெண்ணம்போலே செப்பமையரிந்துசெய்வான்
தன்துணைவிருத்தத்தாலே தனமதுசிலவாமென்றே. 625

௯அ சுங்கனுமலரிதன்னுள் சுகமிலைதந்தைவற்கம்
அங்கமில்லற்பபிடை வற்பலபகையுண்டாதல்
வெங்கலம்பணிதிசெம்பொன் வியப்புறசெய்யாலெய்தும்
தங்கள்தன்யினத்தாருலே சலிப்பதுவந்துசேரும். 626

௯௯. சந்திரனால்ராகு சார்ந்தசித்தன்னை கண்டம்
மைந்தற்குமணமுண்டாகும் மங்கையர்தனக்குவேட்டல்
பிந்தியதாரமைந்தன் பிரபலமனைவிகண்டம்
சந்ததியொன்றுநஷ்டம் சகலரும்புகழவாழ்வான் 627

௪௰. மன்னவன்புநதிகேது மாறகப்பிணியருஷ்டம்
தன்னிடதுணைக்கரிஷ்டம் தையலாள்தனக்கருஷ்டம்
பின்னுருமைந்தன்கண்டம் பிரபலவிபகாரங்கள்
மன்னவன்தன்னால்நன்மை மகிக்ஷியையடைவானென்றே.

௪௧. சுங்கனுமலரியாலோன் சுகஞ்சுளுமெத்தவுண்டு
பங்கினற்பலனுண்டாகும் பருஞ்சுதன் தன்னால்யோகம்
யிங்கிதமைந்தன் தன்னால் யெழில்பெறசெல்வமெய்தும்
மங்கையர்தன்னால்யோகம் மருவிடும்துணைக்கரிஷ்டம். 629

௪௨. ஆரனுமரவுமன்னன் அற்புதசெல்வமுண்டாம்
பேர்பெறுவற்குண்டாகும் பின்னொடுபலன்வாகும்
சீர்பெறவொருவன்செய்யை செழிப்புறவதிக்கிக்கொள்வான்
நேர்முகதெண்டமுண்டாம் கிலைத்திடும்பெரியோனாலே. 630

௪௩. மைந்தனுங்கேதுதன்னில் மைந்தனைலகிகயோகம்
செங்கிருகடாக்ஷமுண்டாம் செய்யொடுபணிமாவுண்டாம்
வந்திடும்சகடம்நந்தி வளம்பெருஞ்செய்பாலாபம்
சுந்தரப்புதல்வனாலே சூழ்ந்திடுந்தந்தைக்கென்றே. 631

௪௪. இந்தநற்செல்வமெல்லாம் யின்புறவற்குயீவான்
தன்தனுயினைத்துவாடும் கையாநிற்கவமிகடில்
யிந்தநற்சடம்விட்டாவி யெழிலபிதுருலகஞ்சார்ந்து
வந்திடும்வருணனுங்கில் வந்திவனுதிப்பானென்றே. 632

௪௫. யிந்தநற்பலனையாங்க ளிசைந்தனநவக்கோளாலே
முந்தியகருமகாண்ட முறைப்படிபவமொழித்தால்
சுந்தரன்தனக்குச்சொன்ன சுகமெலாமனுபவிப்பன்
யிந்திரனிரஞ்சுமாதே யெழில்சுதன்பலனிதாமே. 633

ஆக்மொத்தம் 45-ஐந்தாவதுஜாதகம்
முற்றிற்று.

செவ் சந்திரன் சூரி-புத		குரு	
லக்குணா சுக்ரன்	இராசிசக்கரம்		ராகு
கேது			
சனி			

உ-வது கும்பலக்குணம்.

க. சந்திரன்றவியாமால் சார்ந்திடகெண்டைதன்னில்
யைந்தனும்வில்லில்நின்று மானதில்சிகியுமேவ
சுந்தரமன்னன்விடையில் சூழ்பணிநண்டில்பற்ற
விந்தையாசுங்கன்சாடி விளங்கிடஉதித்தபாலன். 634

உ. நின்றிடச்சனித்தசேயன் நிகழில்லமுரைப்பேன்பிரம்மம்
கொன்றிடுவடதென்வீதி கூறுமில்லிந்திரநோக்கு
சிந்தையாம்பலதேரூழும் சிரப்புளச்சிற்நூர்தன்னில்
அன்றியுமிந்தபால னடைவுடன்சனிப்பானுமே. 635

ங. சனித்திடுமிவனின்யோகம் சாற்றுவேன்தந்தையோகம்
குனித்திடுமன்னையோகம் கூறியயிவன்முன்சன்மம்
வனித்திடும்பலன்களெல்லாம் வழுத்துவேனவக்கோடன்றால்
நனிதிடுனிவன்முன்றனில் நாடியசனனங்கேளாய். 636

ச. தந்தையின்குடும்பச்செய்தி தானெடுத்தியம்பக்கேளு
விந்தையாயவனின்வற்கம் விளம்புவேனுண்பால்பாகம்
எந்தலேபலத்தைக்காணு மிலகிடுங்கன்னியென்று
வந்திடுமிதற்குமேலாய் வழுத்துவேன்பெலமுறுது 637

ரு. இன்னவன்துணைகளான்பால் யிலகிடும்நால்வராகும்
மன்னியகன்னியொன்று மருவிடுமென்றுசெப்பு
பொன்னவாயிதற்குமேலாய் பொருந்தியேசனித்தபோதும்
வின்னமாஞ்சுளுவில்வீயும் விளம்புவேன்மேலுங்கேளே. 638

சு. பாலகன்திற்கமாவன் பகறுவேனிரங்குணத்தை
சீலமாமிருசிவப்பன் சிறந்திடுஞ்சமமேதேகம்
சாலவேயூஷ்ணதேகி சாற்றினேநாசகூர்மை
ஏலவேவிழிகள்ரெண்டு மிலகிடுஞ்சமமதாக. 639

எ. இச்சனேயத்தின்மேலு மிருந்திடும்போசனங்கள்
உச்சிதமாகவுண்டோன் வுறைதமிழ்ச்சமமேயாகும்
மெச்சிடுமன்னியபாஷை விளங்கிடுமிவனுக்கப்பா
பச்சிளமுகத்தைவாய்ந்த பாலகன்பலத்தைக்கேளாய். 640

அ. ஆதியில்கோபனுகு மடைவிலைபின்பால்தாழ்வன்
நீதிலாடம்பனுகும் சிறக்கும்வாய்ச்சாலஞ்சொன்னேன்
கோதிலாப்புலைகள்கூறுன் குணமுளானெவர்க்குநன்பன்
சாதிலான்பகையைவெல்ல தான்மொழிந்திடுவன்வார்த்தை

கூ. சிற்றுண்டிவிருப்பனுவன் சேர்ந்திடுமனுக்கள்பட்சம்
நற்றிலைக்கபடனுகும் நங்கையர்தோஷமுள்ளான்
பற்றியேயிவன்பலத்தை பகர்கின்றேன்றுணைவர்கட்கே
சித்தமாம்யோகம்வாய்க்கும் செப்பினேன்மேலுங்கேளே. 642

௰. தன்மனமழுத்தமுள்ளான் சனங்களும்நல்லோனென்பர்
கன்மனமுடையோன்போல கழறுவேன்பெலத்திருது
பின்னையுங்குழவிபோல பேசியேயெதிரிபொன்னை
நன்னயமாகவாங்க நற்சமத்துடையோனுமே. 643

கக. இவனிடசெங்கைதன்னில் யிலகும்பூமகளின்ரேகை
கவனமாயிருக்குமென்று காட்டினேன்றெளிந்துகாண்பாய்
நவமணிக்கலங்கள்முற்றும் நல்கிடுமிவனுக்கென்றேன்
பவமதுமணுகிடாமல் பாலகன்வாழ்வானுமே. 644

கஉ. தந்தைதாய்பட்சனுகும் சாற்றினேனரசர்நேயன்
விந்தையாயெதிரிக்கஞ்சான் விளங்குநன்மனத்தனுகும்
சுந்தரன்கரங்கால்தானுஞ் சோர்விலாச்சமமென்றோது
விந்தையாம்சகாதேவர் விளம்பியமொழிகுன்றுதே. 645

கங. இன்னலமுடையானுக்கே யியற்றுவேன்மணத்தின்காலம்
சொன்னதோர்நாலாறுண்டுள் துலங்கியவரியின்கோணம்
தன்னிலேவுதித்தமாதை சாதகன்மணமேகொள்வன்
கன்னலின்சுவையேயொன்று கழறினேன்சந்திரநாடி. 646

கச. கொண்டிடுமம்மாதுக்கு குழந்தையுமாண்பால்கான்கு
வண்டுழல்கன்னியொன்று மறுகிடுந்தீர்க்கமாக
விண்டிடாச்சுதர்கள்பாகம் விளங்கியேசிலைக்துநிற்க
கண்டிடுமுன்னுலூழி காலைக்குமிருப்பதாலே. 647

கரு. அதுதனைநிவர்த்திசெய்தா லருளியமனைவிபுத்திர்
கெதியதாய்நிலைத்துநிற்கும் கிளத்தினேன்பெலத்தயோகம்
சதியதுவடைந்தபோது சார்ந்திடாநிவர்த்தியாகும்
விதியதுவளருமென்று விளம்பினேனின்னூடன்னில். 648

வெண்பா.

கசு. பாலகனின்முற்சன்மம் பத்திநிற்குங்காளத்தி
சிலமுளகுன்றின்பால் சன்மித்தே—சாலவருள்
மதுசைவனாகவா காகவாவவ்வூரில்
சீதமிலாசெல்வனகஞ் சென்றே. 649

கஎ. கணிதவேலைக்குரிய காரணத்தைத்தானேற்றான்
மணமுதலிற்றன்செலவு வாங்குதலும்—தனமுடைய
வாணியத்தால்தான்வருகும் மைக்கணக்குங்கைமுதலும்
பேணிவிவங்கைக்கொண்டான் பார். 650

கஅ. அங்கவனைக்கைக்கொண்டு வனுதினமுந்தன்னவர்போல்
பங்கமிலாதேவனுக்குப் பார்த்திடனாய்த்-துங்கமுடன
செய்துவருங்காலிசேர் பிரமன்தன்மனைவி
எய்துவிட்டான்செற்பமதுயென். 651

ககூ. கற்புடையமாது கருவுண்டாங்காலம்பின்
சொற்பிரபுமாண்பதாய் சோர்ந்திட்டான்-விற்புருவ
மாதுமிகவேங்கி வாடிவுளமாயவின்
தீதுடையசைவனென்று செப்பு. 652

வேறுவிருத்தம்.

உ௰. செப்புவானவையேதாயுள் சென்றனர்மரணமாவர்
தப்பிலையதனால்துன்பஞ் சலிப்பதில்பயனேயாது
மைப்படிகண்ணேயென்பார் மகிழுற்றசேர்வாயானல்
ஒப்பியவுயிருமொன்று வுடலதுபிரிவாய்நிற்பேன். 653

உக. என்றவனுரைக்கொனுதயெழிலுமறைவுரைக்கக்கேட்டு
கண்டேனுமொழியாள்நொந்து கரமதுசெவியில்வைத்து
கொண்டதோர்புருசனின்றேல் குறைபலவுனுருமென்று
சண்டிபாத்தானநோக்கால் காட்டுவாள்சாபந்தானே. 654

உஉ. பாவிகேளெசமாந்தேரு பகர்குருவரசன்தேரு
நாவியொன்றமைந்தசேஷ்டன் நலமுளமனைவியோடு
தோவுருபவமனைத்தும் துகளதுபோலேயாகும்
தேவிதீவிரமேயானாள் சிறக்குமுன்னெழுவர்தம்மை. 655

உ௩. கனவிலுமிவர்சடம்மை கவனத்தில்நினைப்பானாகில்
அனைதனைப்புணர்ந்ததோஷ மணுகிடுமிவனுக்கென்றே
தணையிருதயிரிபவன்னம் சாற்றினார்பொருத்தேனென்று
வனிதையினுரையைக்கேட்டு வந்தவனில்லில்சென்று. 656

உ௪. சருத்தினிற்கிசையாவார்த்தை சழறியமாதின்கெற்பம்
திறத்துடனிருக்காவண்ணம் செய்திட்டான்மாந்திரீகத்தால்
வருத்தமாய்ச்சிசுவும்வீழ வாடியேபிரமன்பெண்டீர்
கருத்துளபெரியோர்தன்னால் கண்டிடச்சாபஞ்சொல்வாள்.

வேறுவிருத்தம்.

உ௫. சொல்லுவாளென்கருவைக் கெடுத்தபாவி
சோர்வாகப்பிரசன்மந் தாகயின்றி
வெல்லுவாய்களத்திரத்தின் தோசமுண்டாய்
மேவிடுவாய்த்துன்பமென விரைந்துகூறி
அல்விருவாங்குழலாளின் சொல்லின்வண்ணம்
யறைந்துவிட்டான்சதுர்முகனும் பிரமன்பா
தொல்லையிலாதானரிய சந்திரநாடி
சோமவான்முன்னூழி தொலையச்சொல்வேன். 658

உ௬. விட்டதொருவூழ்திரச் சொல்வேன்யானும்
விதமாகஜாதசற்கு புகலும்வண்ணம்
கட்டமாமயூரமெனுந் தலத்துக்கேகி
கருத்திசைந்துசதிபுருஷா ளிருவருந்தான்
தொட்டதொருபட்சமது யிரண்டுநின்று
சுகம்பெறவேதினந்தோறுந் தீர்த்தந்தோய்ந்து
திட்டமுடனதிதிகட்கு மன்னமீய்ந்து
சிவபெருமான்றிருப்பாதந் தினமும்போற்றி. 659

உ௭. போற்றியபின்கடைநாளில் கற்பின்மாது
புகழாகபதின்மர்கட் காடைசெம்பொன்
சாறறியநற்சந்தமுடன் புட்பமீய்ந்து
தானவரின்திருமுடியால் முன்னாள்குற்றம்
தீர்த்துவிட்டோமென்றவருக் காசீரோத்து
செழிப்புடனேசுயதலத்துக் கேகிபின்னால்
பார்த்திபனும்நல்லதோர் சோமவாரம்
பண்பானகிர்த்திகைநாள் விரதம்பூண்டே. 660

௨௮. செப்பியதோர்விரசமது பிரியாமாண்டு
சிறந்திடவேதானிருந்து சத்திவேலை
ஒப்பியதோர்மனத்தோனைய் பூசைசெய்ய
உண்டாகுஞ்சந்ததியு மனைவிதிற்கம்
தப்பாதயவ்விதியைச் செய்யானாகில்
தாணிதனில்மனைவியற்கு மரிஷ்டமாகும்
மைப்பொருதுமைந்தனுக்கு அதியைதானும்
வகுத்துவிட்டேனிவன்றனது யோகங்கேளே. 661

வேறு-விருத்தம்.

௨௯. சாதகன்சனனந்தொட்டு சார்ந்திடுமீராறுண்டும்
போதவேதந்தைக்கேதான் புகன்றனன்நயத்தயோகம்
ஏதமேவபணிதாராவு மிலகிடும்கிதிமென்மேலாம்
காதலையகற்றவல்லாய் கழறுவேன்மேலுங்கேளே. 662

௩௰. பிரபலங்கீர்த்தியொப்பன் பின்வெகுபேரைக்காப்பன்
குரைவுறுமரசராலுங் குணமுளவாயசமத்தால்
திறமையாய்பொருளுஞ்சேரும் தீங்கதுயாதுங்காணோம்
இவ்வெனுங்கேசமாமே யிவன்வெகுகீர்த்திவானே. 663

௩௧. அதுமுதலொருபதாண்டு அற்புதன்தனக்குயோகம்
கெதியுளவித்தைலாபம் கிடைத்திடுமன்னியபாஷை
சதியிலாப்பாலனுக்கு சார்ந்திடும்பலபேர்நேசம்
நிதியதுவளருமென்று நிகழ்த்தினேனின்னாடனில். 664

௩௨. பலபலமனுக்கள்நேயன் பலித்திடுமதன்மேலாறும்
குலவியவரசராலும் குணமுளதொழிலும்வாய்க்கும்
பெலமதாய்த்தனங்கள்விருத்தி பெருகிடும்நாணயங்கள்
கலகமுமடைந்திடாமல் கலனறவாழ்வானாமே. 665

௩௩ அரசர்கள்தொழிலினாறு மணிசனமென்மேலோங்கும்
குறைவதுவடைந்தபோது குணமிலாநிவர்க்கியாகும்
திறமுளவதின்மேலாக செழித்திடும்நவமதாகும்
அரமதுவிருத்தியோங்கி யணிசுதன்வாழ்வானாமே. 666

௩௪. அதுமுதலுபயவாண்டு மணுகிடும்நஷ்டயோகம்
கெதியுளப்பொருளுஞ்சேரும் சேவகம்வந்துதீரும்
பதியுளவதின்மேலாக பாலகனுயுள்மட்டும்
விதியதுவிருத்தியுண்டாய் விளங்கியேவாழ்வானாமே. 667

௩௫. பாக்கியத்ததியனானோன் பருகிடவுதயந்தன்னில்
தாங்கியத்தனலாவாதி தரித்திடச்சுகத்தின்மீது
வாக்கினில்ராவிமால்சேயும் மதியுடன்கூடிநிற்க
போக்கியவுதயனாதன் புக்கிடலாபந்தன்னில். 668

௩௯. இத்தகைகநவக்கோள்நிற்க யிலகியபாலனுக்கு
பெற்றிடும்பெலத்தயோகம் பெருகிடும்நாலார்மேலாய்
வெற்றியாயரசாளும் விளங்கியபலயினத்தால்
நத்தியேயொருமின்மேலாய் நலமுடன்படைத்துவாழ்வன்.

௩௭. பாலகன்தந்தையோகம் பெருகிடும்பெலமதாக
சீலமாந்துணைகள்யோகம் செப்பினேன்விவரமெல்லாம்
சாலவேயவர்குறிப்பில் சாற்றினேன்தெளிந்துகாண்பாய்
வேலனைப்போற்றும்வேந்தே விளம்புவேன்மேலுங்கேளே.

௩௮. தந்தையும்நாலொண்பாண்டுள் தறித்திடாதரிஷ்டமாவன்
பிந்தியவன்னைதானும் பேசியமுப்பாண்டுள்ளே
பைந்தொடிமேனியாளும் பகருவிண்ணுலகைச்சேர்வள்
சுந்தரன்கெண்டகாலஞ் சொல்லுவேனினிமேலப்பா. 671

௩௯. வந்திடுஞ்சிறுகெண்டங்கள் வளமுளபண்டிதத்தால்
விந்தையாய்நிவர்த்தியாகும் விளம்புவேனிவனிறையுள்
எந்தலேயெழுபான்ரெண்டுள் யிலகியவிடயந்திங்கள்
சுந்தரனுடலம்வாடி சேருவான்கைலைக்கென்னே. 672

௪0. இன்னவன்பின்னல்சன்ம மெடுத்தினியுரைக்கக்கேளு
சொன்னனேவதிகைதென்பால் துலங்கிடுஞ்சித்தூரொன்றில்
நன்னயச்சூத்திரனாக நவிலுவன்சனனமாகி
மன்னனேயோகம்பெற்று மதலையும்வாழ்வானாமே. 673

௪௧. இந்தநற்பலனையாங்க ளிசைந்தனனவக்கோளாலே
முந்தியகருமகாண்டம் முறைப்படிபவமொழித்தால்
சுந்தரன்தனக்குச்சொன்ன சுகமெலாமனுபவிப்பான்
இந்திரனிறஞ்சுமாதே யெழில்சுதன்பலனிதாமே. 674

ஆகமொத்தம் 41-ஆறுலதுஜாதகம்

முற்றிற்று.

சகாதேவர் அருளிச்செய்த

சந்திரநாடி — ௬௦௪

பாடல்கள் சம்பூர்ணம்,

இராசியின்பெயர் நிகண்டு.

மேஷம்	மொத்தை மறி-தகர்-ஏழகம்-முல்லை-கொச்சை-மைகாலி ஆகபெயர்-௭
ரிஷபம்	விடை-பாண்டில்-எருது-குண்டை-செ-புல்லம்-ஆக-௬.
மிதுனம்	தாரம்-சண்டு-யாழ்-வீணை-கவுஞ்சன் ஆக-௫.
கடகம்	கொண்டல்-குளிர்-அளி-சொக்கை-கீர்-நண்டு-கார்அலவன ஆக-௮.
சிங்கம்	அரி-புலி-சிற்றில்-கொள்-மாகடுவன்-சீயம் ஆக-௬.
கன்னி	மாது-தெரிவை-சென்-சேடிகை ஆக-௪.
துலாம்	கோல்-கட்டளை-வாணிபம்-தூக்கல்நிறை-செட்டி ஆக-௬.
விருச்சிகம்	தேள்-அவிட்டம்-சீர்-துட்டன்-தெருக்கால் ஆக-௫.
தனுசு	காண்டீபம்-கார்முகம்-சிலை ஆக-௩.
மகரம	மான்றலை-கேழல்-புல்வாய்-சுறா ஆக-௪.
கும்பம்	குடம்-சாடி-கூன்-சால்-கலசம்-சட்டுவம் ஆக-௬.
மீனம்	மீன்-கயல்-சேல்-கண்டை ஆக-௪.

கிரகத்தின்பெயர் நிகண்டு.

3465

சூரியன்பெயர்.

திக்கரிவோன்-தினகரன்-பகலோன்-வெய்யோன்-திவாகரன்-பானுமார்தாண்டன்-அருக்கன்-உதயன்-என்றூழ்-இரவிபரிதி-கோளரசன்-ஆதவன்-ஞாயறு-அருணமூர்த்தி-அரிபுண்டரியன்-வெங்கதிர்-செங்கதிர்-பாஸ்கரன்-முதியன் சகலலோகமூர்த்தி ஆக-௨௧.

சந்திரன்பெயர்.

சசி-இரவோன்-சோமன்-மதி-பிறை-இந்து-திங்கள்-வெண்ணிலா-அம்புலி-உடுபதி-நாளரசன்-அலவன் ஆக-௧௩.

செவ்வாயின்பெயர்.

சேய்-குசன்-அங்காரகன்-கனல்-பூமகன்-வக்கிரன்-தாரிதி-அங்கி-ஆரல்-நிலமகன்-அழல் ஆக-௧௧.

புதன்பெயர்.

புலவன்-மால்-மேதை-தூதுவன்-பொரையன்-புந்தி-அறிஞன் மதிமகன்-கணக்கன் ஆக-௯

குருவின்பெயர்.

அந்தணன்-மந்திரி-பொன்-பீதகன்-சீவன் ஆக-௫.

சுக்கிரன்பெயர்.

சுங்கன்-மழைக்கோள்-சிதம்-பார்க்கவன்-புகர் ஆக-௫.

சனியின்பெயர்.

இரவிமகன்-முடவன்-சுன்-முதுமகன்-மந்தன்-காரி-கரியவன்-நீலன் ஆக-௰.

இருகுவின்பெயர்-பணி-செங்கோள் ஆக-௨.

கேதுவின்பெயர் சிகி ஆக-௧.